ஆனால் வழக்குரைஞர்கள் சங்கம் தாங்கள் சம்மதம் அளிக்கவில்லை என்று கூறுவதாகவும், திரு. உமாநாத் அவர்களும் திரு. சுப்பு அவர்களும் குறிப்பிட்டு, எனவே அமைச்சர் அவர்கள் பேரவைக்குத் தவறான தகவலைத் தந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் விளக்கத்தில், தாம் வழக்கறிஞர் சங்கங்களை கலந்துகொண்டதாகவோ அல்லது அவர்கள் சம்மதத்தைப் பெற்றதாகவோ கூறவில்லை என்றும், அச்சங்கத்தின் ஒரு பொறுப்புள்ளவர் முதல்வரின் தனிச் செயலரிடம் இசைவு அளித்ததையே, வழக்கறிஞர்களை கலந்து கொண்டு என்று தான் அவையில் அறிவித்தாகவும் கூறினார்கள்.

பேரவைக்குத் தரப்படும் தவறான செய்தியை, தவறு என்று தெரிந்திருந்தும், வேண்டுமென்றே அவையைத் திசை திருப்பும் எண்ணத்துடன் அத்தவறான செய்தி சொல்லப்பட்டால்தான் அது அவை உரிமை மீறிய செயல் ஆகும். மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திலிருந்து, அவர் தவறான செய்தியை தவறு என்று அறிந்திருந்தும் அவைக்கு அளித்தார் என்று கொள்வதற்கில்லை. அப்படி அவர் அளித்தார் என்பதற்கான எந்தவித ஆதாரமும், இப்பிரச்னையை எழுப்பிய உறுப்பினர்களால் கொடுக்கப்படவும் இல்லை. எனவே, இப்பிரச்னையில் மெலெழுந்தவாரியாகக் கூட அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்,

2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(இ) உறுப்பினர்கள் கொடுத்த பிரச்னைகள் எடுத்துக் கொள்வது குறித்து

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்னொரு உரிமைப் பிரச்னை நீண்டகாலமாக எடுக்கப்படாமல் இருக்கிறது. அது என்றைக்கு வரும்? மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது நான் இங்கு எழுப்பிய உரிமைப் பிரச்னை அது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இன்னும் இரண்டு நாட்களில் கொண்டு வரப்படும்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, நானும் ஒரு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள், ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

1979 மார்ச் 19]

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, அதேபோல 16-ம் தேதி ஒரு உரிமைப் பிரச்னையை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள் அரங்கநாதன். இது முதலில் முடிந்து விடட்டும்.

5. ஒத்திவைப்புத் தீர்மானம்

வழக்கறிஞர்கள் போராட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு முழுவதிலும் உள்ள வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடாது என்ற முடிவு செய்ததால் எழுந்துள்ள அவசர முக்கியததுவம் வாய்ந்த நிலை குறித்து திரு. சுப்பு, திரு. துரைமுத்துசாமி, திரு. சி. கோவிந்தராசன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. மாரிமுத்து, திரு. ப. சந்திரன், திரு. எம். ஏ. லத்தீப் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். முதலில் திரு. சுப்பு அவர்களை சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை உண்மையிலேயே அவசரமான பதட்ட நிலைமையை உருவாக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லவில்லை, நீதிமன்றங்கள் செயல்பட முடியாமல் ஸ்தம்பித்து நிற்கின்றன. அதனால் இதை ஆராயும்போது, கோரிக்கைகளின் நியாயத்தை உணர்ந்தும், உணர்ச்சிவசப் படாமலும், அதிகார வர்க்கத்துக்கு அடிபணிந்து விடாமலும் முடிவு எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலும் மற்றும் எல்லா மாவட்ட வழக்கறிஞர்களும் ராமநாதபுரம் தவிர என்று போட்டிருக்கிறது-ராமநாதபுரத்தை தவிர எல்லா மாவட்ட வழக்கறிஞர்களும் கூடி முடிவு எடுத் திருக்கிறார்கள் — நீதிமன்றங்களுக்கு போவதில்லை என்று. அவர்களின் அசோசியேஷன் எல்லாம் இருக்கிறது. அவர்களை யெல்லாம் விட்டு விட்டு, நாங்கள் வழக்கறிஞர்களை கலந்து ஆலோசித்தோம் என்று சொல்லுகிறது அரசு. இதிலே முக்கிய மானது என்னவென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய விஷயங்கள் உண்மைக்கு மாறானது என்று சொல்கிறார்கள். வழக்கறிஞர்கள் சங்க காரியதரிசி லட்சுமிநாராயணன் முதல்வரின் அந்தரங்கச் செயலாளர் லட்சுமி நாராயணனைக் கண்டு பேசியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படி பேசவில்லை என்று வழக்கறிஞர் லட்சுமி நாராயணன் வருத்தத்தோடு சொல்லியிருக்கிறார்கள். ஓர் முதலமைச்சர் இப்படி ஒரு வழக்கறிஞர் மனம் புண்படும்படி